## நண்பர்களே வணக்கம்....

சிறுவர்களுடன் உறவாடுவது, சிறுவர்களுக்காக எழுதுவது, சிறுவர்களைப் பற்றி எழுதுவது எனக்கு எப்போதுமே பிடித்தமான விஷயம். 24 வருடங்களுக்கு முன்னர் சென்னை தூர்தர்ஷனில் சிறுவர் நிகழ்ச்சி தயாரிக்க நான் விண்ணப்பித்தபோது அனுமதி மறுக்கப்பட்டதும் நீதிமன்றம் சென்று அதன் உத்தரவின் அடிப்படையில் நிகழ்ச்சிக்கு அனுமதி பெற்றேன். அப்போது தயாரித்த கண்ணாடிக் கதைகள் எனக்கு சிறந்த இயக்குநருக்கான சாந்தோம் கலை விருதைப் பெற்றுத் தந்தது.

அடுத்து 1999ல் விகடன் குழுமம் சிறுவருக்கான இதழொன்றைத் தொடங்க விரும்பியபோது அதை நான் கள ஆய்வுக்குப் பின்னர் வடிவமைத்து பெயர் சூட்டி உருவாக்கிய பொறுப்பாசிரியராக இருந்தேன். அதுதான் சுட்டி விகடன். அடுத்து 2015ல் தமிழில் முதன்முறையாக மாணவர்களுக்கென்று தினசரி இதழை தினமலர் தொடங்க முடிவு செய்தபோது மீண்டும் கள ஆய்வின் அடிப்படையில் அதை உருவாக்கும் ஆலோசகரானேன். அதுதான் பட்டம்.

கடந்த பத்தாண்டுகளாக திருச்சி சமயபுரம் எஸ்.ஆர்.வி பள்ளியின் ஆலோசகர்களில் ஒருவராக இருப்பதால் மாணவர்களுடன் உறவாடும் இனிய வாய்ப்பு தொடர்ந்து இருந்து வருகிறது.

இவையெல்லாம் எனக்குள் இருக்கும் சிறுவனை எப்போதும் உயிர்ப்புடன் வைத்திருக்க எனக்கு உதவுகின்றன. மாலுவும் பாலுவும் ஏன் வாலுவும் கூட என்னுள் எப்போதும் இருப்பவர்கள்தான். என்னைச் சுற்றிலும் நான் சந்திக்கும் எண்ணற்ற மாலுக்களும் பாலுக்களும் கூட இதற்குள் இருக்கிறார்கள்.

1999-2000ல் சுட்டி விகடனில் எழுதியவையும் பின்னர் 2015-2016ல்

பட்டம் இதழில் எழுதியவையும் இந்த நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

மாலுவின் டயரி ஒரு தகவல் தொகுப்பு அல்ல. ஏராளமான தகவல்கள் ஊடாக, வாழ்க்கை பற்றிய ஒரு பார்வை, மதிப்பீடுகளுக்கான தேவை இரண்டும் இழைந்தே அதில் உள்ளன. தொடர்ந்து கேள்விகள் கேட்பது, பதில்களைத் தேடுவது என்ற குழந்தைமையின் குறுகுறுப்பே மாலு டயரியின் அடிப்படை. பத்து முதல் 16 வயது வரை உள்ள ஒவ்வொரு சிறுமியும் சிறுவனும் தங்களை இதில் சந்திக்கலாம். இதைப் படித்தபின்னர் மேலும் பல மாலுக்களும் பாலுக்களும் டயரி எழுத ஆரம்பித்தால் நிச்சயம் மகிழ்வேன்.

அன்புடன்
ஞாநி